**செய்தி வெளியீடு எண். 258** **நாள்.23.3.2010**

**26.3.2010 (வெள்ளிக்கிழமை) அன்று அரசு பொது மருத்துவமனை–சென்னை மருத்துவக் கல்லூரி –பர்னார்டு கதிரியக்கவியல் மற்றும் புற்றுநோயியல் நிறுவனத்தின் பவள விழா (75 ஆம் ஆண்டு) கொண்டாடப்படுகிறது.**

சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரியில் இயங்கிவரும் பர்னார்டு கதிரியக்கவியல் மற்றும் புற்றுநோயியல் நிறுவனம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகளாக நடைபெறுவதையொட்டி, பவள விழா நிகழ்ச்சி 26.3.2010 (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கு, சென்னை மருத்துவக் கல்லூரி கருத்தரங்க வளாகத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் பங்கேற்று, மறைந்த T.W.பர்னார்டு அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், விழா மலரை வெளியிட்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள். இந்நிகழ்வில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.வி.கு.சுப்புராஜ், இ.ஆ.ப. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., மருத்துவக் கல்வித் துறையின் இயக்குநர் மருத்துவர் எஸ்.,விநாயகம், பர்னார்டு கதிரியக்கவியல் மற்றும் புற்றுநோயியல் துறையின் இயக்குநர் மருத்துவர் எம்.பிரபாகரன், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு.ஜே.மோகனசுந்தரம் ஆகியோர் பங்கேற்கின்றனர். இவ்விழாவிற்கு மருத்துவர் கே.வனிதா, பேராசிரியர், அணுக்கரு மருந்தியல் அவர்கள் வரவேற்புரையாற்றவும், மருத்துவர் எஸ்.சண்முககுமார், பேராசிரியர், புற்றுநோய்த்துறை அவர்கள் நன்றியுரையாற்ற உள்ளார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கதிரியக்கவியல் துறையில் முதன்முதலாக பணியாற்றி இத்துறைக்கு பேரும் புகழும் ஈட்டித்தந்த கதிரியக்கவியல் அறிஞர் கேப்டன் T.W. பர்னார்டு அவர்களின்பெயர் இந்நிறுவனத்திற்கு சூட்டப்பட்டு 75 ஆண்டுகளாக சிறப்பாக பல்வேறு சேவைகளை செய்து இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இவருடைய மகள் திருமதி.பார்பரா கிங் (தற்போது 85 வயது) இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இலண்டன் மாநகரிலிருந்து சென்னை வருகிறார்கள்.
கேப்டன் T.W. பர்னார்டு அவர்கள் பணி ஓய்வு பெறும்போது அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்கள், அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், இத்துறையில் அப்போது பணியாற்றியவர்கள் அனைவரும் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களை எடுத்துவந்து, அனைவருக்கும் காண்பித்து, தன்னுடைய தந்தையார் பணியாற்றிய போது ஏற்பட்ட நிகழ்வுகளை–நினைவுகளை பகிர்ந்துக் கொள்ள உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு இந்நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் எம்.பிரபாகரன் அவர்கள் அன்புடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.